அசல்வழக்கு எண். 5/2023

நாள் : 25.04.2025.

வா.சா. : 2

பெயர் : செந்தில் முருகன்

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வாதி பாலமுருகனின் மைத்துனர் என்றால் இல்லை நெருங்கிய உறவினர். வாதி என்னுடைய மாமா பையன். மேற்படி விவரத்தை பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரி. நான் வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரி பிரான்ஸில் வேலை பார்க்கிறேன். பிரதிவாதி வாதியிடம் 4 லட்சம் ரூபாய் பணம் வாங்கிகொண்டு பெந்தக கடன் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்தது தான் தெரியும் என்றாலும் அதில் நான்சாட்சிகையெழுத்து செய்துள்ளேன் என்றாலும் அதற்கு பிறகு நடந்த சங்கதிகள் நான் வெளிநாட்டில் இருந்ததால் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் பிரான்ஸிற்கு போய் 8 மாதங்கள் தான் ஆகிறது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் தான் சொன்னேன். நான் விருப்ப சாட்சி என்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளகூடிய சாட்சியம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

25/4/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

25/4/25